# NLDB

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தேசிய கால்நடை அபிவிருத்தி சபை (NLDB) வெற்றிடங்கள் - விண்ணப்பங்கள் கோரல்

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையில் (NLDB) நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கள / கால்நடை உதவியாளர் (Field / Livestock Assistant) | 20 |
| 2 | சாரதிகள் (Drivers) | 10 |
| 3 | உழவு இயந்திர இயக்குநர்கள் (Tractor Operators) | 10 |

01. கள / கால்நடை உதவியாளர் (Field / Livestock Assistant)

- **கல்வித் தகுதிகள்:**
  - க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கில மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தி (Credit) பெற்றிருத்தல் வேண்டும்.
  - மற்றும்
  - க.பொ.த (உயர் தர) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பொது சாதாரண பரீட்சை மற்றும் ஆங்கிலம் நீங்கலாக).
- **வயது எல்லை** : 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- **சம்பள அளவுத்திட்டம்** : MA 1-2-2025 - ரூ. 46,220/- 10x540/-, 07x630/-, 12x1,080/-, 12x1,280/-, 84,350/-
- **ஏனைய கொடுப்பனவுகள்** : வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூ. 17,800/-, உள் மற்றும் வெளிவாரியான மருத்துவ நன்மைகள்.

**02. சாரதிகள் (Drivers)**

- **கல்வித் தகுதிகள்:**
  - க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
  - மற்றும்
  - கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் புகழ்பெற்ற நிறுவனமொன்றில் கனரக வாகனங்களை ஓட்டுவதில் குறைந்தபட்சம் (03) மூன்று வருட அனுபவம்.
- **வயது எல்லை** : 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- **சம்பள அளவுத்திட்டம்** : PL 3-2025 : ரூ. 43,280/- 10 x 490/- – 10 x 540/- – 10 x 590/- –12 x 630/-, 67,040/-
- **ஏனைய கொடுப்பனவுகள்** : வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூ. 17,800/-, உள் மற்றும் வெளிவாரியான மருத்துவ நன்மைகள்.

**03. உழவு இயந்திர இயக்குநர்கள் (Tractor Operators)**

- **கல்வித் தகுதிகள்:**
  - க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
  - மற்றும்
  - கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் புகழ்பெற்ற நிறுவனமொன்றில் கனரக வாகனங்களை ஓட்டுவதில் குறைந்தபட்சம் (03) மூன்று வருட அனுபவம்.
- **வயது எல்லை** : 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- **சம்பள அளவுத்திட்டம்** : PL 3-2025 : ரூ. 43,280/- 10 x 490/- – 10 x 540/- – 10 x 590/- –12 x 630/-, 67,040/-
- **ஏனைய கொடுப்பனவுகள்** : வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூ. 17,800/-, உள் மற்றும் வெளிவாரியான மருத்துவ நன்மைகள்.

**தொழில் நியமன நிபந்தனைகள்**

- நிரந்தரமானது.
- அரசாங்கம் மற்றும் NLDB விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டது.

**விண்ணப்பிக்கும் முறை** : விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களின் பிரதிகள், சுயவிபரக் குறிப்பு (CV) மற்றும் உறவுமுறையற்ற இரண்டு நடுவர்களின் விபரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**முடிவுத் திகதி** : விண்ணப்பங்கள் 2026 பெப்ரவரி 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கீழே உள்ள முகவரியை வந்தடைய வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**முக்கிய குறிப்புகள்**

- குறும்பட்டியலிடப்பட்ட (Shortlisted) விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வு அல்லது / மற்றும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.
- எந்தவொரு வடிவிலும் செல்வாக்கு செலுத்துதல் தகுதியின்மையாக கருதப்படும்.
- எந்தவொரு விண்ணப்பத்தையும் காரணங்கள் குறிப்பிடாமல் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க சபைக்கு உரிமை உண்டு.
- மேலதிக விபரங்களை மனிதவளப் பிரிவை (HR Division) தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்: 011-7173326 அல்லது மின்னஞ்சல்: nldbhr@gmail.com

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

**தலைவர், தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, இல. 40, நாவல வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 05.**

அரசாங்க ஊழியர்கள் தங்கள் நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

தலைவர் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை இல. 40, நாவல வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 05.

**திகதி: 23.01.2026**